# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1949/29 - 2016 ජනවාරි මස 12 වැනි අඟහරුවාදා - 2016.01.12

*1949/29 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் விதிக்கப்பட்ட, 2015.11.20 ஆந் திகதிய 1941/29 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட கட்டளையின் அட்டவணையை இதனகத்துப் பின்னர் உள்ளவாறு திருத்தியமைக்கின்றேன்.*

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 1,
2016, சனவரி 11.

**அட்டவணை**

1. 2015.11. 20 ஆந் திகதிய 1941/29 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணை II இன் விடயம் I உடனடுத்து முன்னர் கீழ்வரும் விடயங்களை உட்படுத்துவதன் மூலம் :-

| இல. I | | விடயம் II | உற்பத்தி தீர்வை III |
|---|---|---|---|
| 1 | (அ) | இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம் :<br>(அ) 1999.10.08 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 22/99 மற்றும் அதற்குப் பிற்பட்ட திருத்தங்களுக்கு ஏற்ப, அரச உத்தியோகத்தர் ஒருவரினால், மற்றும்<br>(ஆ) 2013.08. 02 ஆந் திகதிய வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2003 மற்றும் அதற்குப்பிற்பட்ட திருத்தங்களுக்கு ஏற்ப, அரச உத்தி யோகத்தர் ஒருவரினால், | 2015.02.26 ஆந் திகதிய 1903/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் அவற்றிற்கு நேரொத்த பதிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இல. I | | விடயம் II | உற்பத்தி தீர்வை III |
|---|---|---|---|
| | | 2015.11.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சலுகை அடிப்படையில் வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப் பட்டும், 2015.12.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் திருத்தப் பட்டும் இறக்குமதி செய்யப் பட்டிருப்பின், | |
| | (ஆ) | இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம் :<br>2015.09.11 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் திறக்கப்பட்டு, 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2 (1) ஆ, (i) மற்றும் (ii) ஏற்பாடுகளிலுள்ள சட்டதிட்டங்கள், அதற்குப் பிற்பட்ட திருத்தங்கள் என்பனவற்றிற்கு ஏற்ப, வரி செலுத்தும் தனிநபர் ஒருவரினால், இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், | 2015.02.26 ஆந் திகதிய 1903/ 39 ஆம இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் அவற்றிற்கு நேரொத்த பதிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதம் |
| | (இ) | இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம்:<br>2015.11.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் திறக்கப்பட்டு தனிப்பட்ட பாவனைக்காக இறக்குமதி செய்யப்பட்டு 2016.03.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தனிப்பட்ட பாவனைக்காக இறக்குமதி செய்த குறித்த நபரின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டி ருப்பின், பொது திறைசேரியின் முன் அங்கீகாரமின்றி பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து குறித்த வாகனத்தினை ஐந்து (05) வருடங்களுக்கு கைமாற்றலாகாது. | 2015.02.26 ஆந் திகதிய 1903/ 39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் அவற்றிற்கு நேரொத்த பதிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதம் |

2. 2015.11. 20 ஆந் திகதிய 1941/29 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள அட்டவணை II இல் 1 முதல் 3 வகையான விடயங்களை 2 முதல் 4 வரை என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்,

2- 150

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.